Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 336/2020 Date: 06.11.2025
Deposition of witness for prosecution: PW3 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சரிதா | Village | நெடுங்கண்டம் |
| Father/ Husband Name | சுரேஷ்குமார் | Taluk | கேரளா |
| Age | 39 /2025 | Calling | கடையில் வேலை செய்து வருகிறேன் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 06.11.2025 TIME 12.45 **PM**

1–வது எதிரி ஆஜரில்லை, 3–வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

அ.சா.1 எனது கணவர். எதிரிகளை தெரியும். எனது மாமனார் வீட்டின் அருகே குடியிருக்கிறார்கள். சுமார் 7–8 வருடங்களுக்கு முன்பு நிர்மலா என்பவரிடம் இருந்து எனது கணவர் சுரேஷ் ரூ.1,30,000/– வாங்கியிருப்பதாகவும், அதற்கு ரூ.5 வட்டி வைத்து மாதம் ரூ.6500/– கொடுக்க வேண்டும் என்றும், எனது கணவர் என்னிடம் கூறினார். எனது கணவர் வட்டி செலுத்தியுள்ளார். கடையில் நஷ்டம் ஏற்பட்டதால், பணம் வாங்கியதிலிருந்து ஒரு வருடம் கழித்து எங்களால் கொடுக்கயியலவில்லை. இதற்குகிடையில் எனது கணவர் நிர்மலா என்பவரிடம் ரூ.50 ஆயிரம் இரண்டு முறை வாங்கியுள்ளதாக எனது கணவர் என்னிடம் கூறினார். அதற்கு ஈடாக எங்களது வீட்டின் பத்திரம் மற்றும் எனது மாமனார் வீட்டின் பத்திரம், எனது 2 தோடு, ஒரு தாயத்து, ஒரு மோதிரம், இருசக்கர வாகனத்தின் RC புக் ஆகியவற்றை கொடுத்திருப்பதாக எனது கணவர் என்னிடம் கூறினார். நாங்கள் நிர்மலாவிடம் ரூ.2 லட்சத்திற்கு சீட்டு போட்டு, அதில் ரூ.1 லட்சத்தை எடுத்துக்கொள்ளுமாறு கூறினோம். கடந்த 03.02.2018–ம் தேதி நானும், எனது கணவரும் எனது மாமனார் வீட்டிற்கு சென்றுருந்த போது அங்கு வைத்து, பணத்திற்காக எங்களது இருசக்கர வாகனத்தை கைப்பற்றப்போவதாக நிர்மலாவின் கணவர் எங்களிடம் கூறினார். அன்றைய தினம் 10.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எனது கணவர் வெளியே செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். 11.00 மணி போல் ஒரு நபர் எனது வீட்டிற்கு வந்து எனது கணவர் அரளிவிதையையும், கண்ணாடி பாட்டிலையும் அறைத்து குடித்துவிட்டதாக கூறினார். ஆட்டோ மூலமாக கம்பம் அரசு மருத்துவமனைக்கு ஒரு நபர் அழைத்து சென்றார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக எனது கணவரை தேனி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கே இராயப்பன்பட்டி காவல்நிலைய போலிசார் என்னை விசாரித்து வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது சாட்சியம் அளிக்க வைத்துருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வரவு, செலவு கணக்கு எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னிடம் வரவு செலவு கணக்குகளை சொல்லுவார். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 03.02.2018–ம் தேதி அன்று காலையில் நடந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். உண்மையில் புகார் சம்பவம் நடந்திருந்தால், புகார் அளித்திருப்போம் என்றாலும் அவ்வாறு நடக்கவில்லை என்பதால் தான் புகார் அளிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. அரளிவிதை மற்றும் கண்ணாடி துகள்களை எனது கணவர் சாப்பிட்டது குறித்து எனது கணவர் சொல்லிதான் தெரியும் என்றால் எனது கணவரும் சொன்னார், கம்பம் அரசு மருத்துவமனை மருத்துவரும் சொன்னார். அவ்வாறு சொல்லும் போது போலிசார் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. எனது கணவரும், 1–வது எதிரிக்கும் என்ன பிரச்சனை என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, 1–வது எதிரி எனது கணவரின் வாகனத்தை எடுத்ததால் தான் பிரச்சனை வந்தது. எனது கணவரின் வாகனம் யமகா ஆகும், அதன் பதிவெண் தற்போது ஞாபகமில்லை. புகார் யார் அளித்தார்கள் என்றால் நான் தான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் காவல்நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்களா என்றால் தேனி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள், பின்னர் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சம்பம் உண்மையில் நடைப்பெற்றுருந்தால் கம்பம் மருத்துவமனை மற்றும் தேனி மருத்துவமனையிலும் சான்று அளித்திருப்பார்கள் என்றாலும் எனது கணவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவரை தேனி அரசு மருத்துவமனையில் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் புகார் கொடுத்த சமயத்தில் என்னை மட்டும் விசாரித்தார்கள், எனது கணவர் தீவிர சிகிச்சையில் இருந்ததால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/ P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.